MALAI MALAR 01 OCT 2008

### ஈஷா யோக மையம் சார்பில்

# கிராம மக்கள் மேம்பாட்டு திட்ட தொடக்க விழா

## ஆலாந்துறையில் 4-ந் தேதி நடக்கிறது

கோவை, அக். 1–

ஈஷா அறக்கட்டளை நிர்வாகி திலீப், கிராம புத்துணர்வு இயக்கம் சேகர், டாக்டர் சதீஷ், லட்சுமி நாராயணன் ஆகியோர் நிருபர்களிடம் கூறியதாவது:-

**ஈஷா மருத்துவமனை**

ஈஷா அறக்கட்டளை சார்பில் கோவை மாவட்டம் வாவிபாளையம், சேலம் மாவட்டம் குள்ளப்பநாயக்கனூர் ஆகிய கிராமங்களில் ஈஷா மருத்துவமனை அமைக்கப்பட்டு செயல்பட்டு வரு கிறது. கோவை ஆலாந்துறையில் ரூ. 30 லட்சம் மதிப்பில் புதிய மருத்துவமனை கட்டப் பட்டுள்ளது. 24 மணி நேரமும் இயங்க உள்ள இந்த மருத்துவமனை திறப்பு விழா மற்றும் கிராம மக்கள் மேம்பாட்டு திட்ட தொடக்க விழா வருகிற 4-ந் தேதி (சனிக்கிழமை) மாலை 5 மணிக்கு நடக்கிறது.ஆரோக்கிய வாழ்வை பற்றிய விழிப்புணர்வு, குழந்தைகள் மற்றும் முதியோர் நலம் காத்தல், ஊட்டச்சத்து, பற்றாக்குறையை நீக்குதல் போன்ற பணிகளும் மேற்கொள்ளப்படும்.

**ஜக்கிவாசுதேவ்**

விழாவுக்கு மு.கண்ணப்பன் எம்.எல்.ஏ. தலைமை தாங்குகிறார். ஈஷா யோகா மைய நிறுவனர் சத்குரு ஜக்கி வாசுதேவ் முன்னிலை வகித்து அருளுரை வழங்குகிறார்.

இந்த விழாவில்மைக்ரோ சாப்ட் இந்தியா சேர்மன் ரவிவெங்கடேஷ், சுஸ்லான் நிறுவன அதிகாரி ரமேஷ்ராவ் கோவை அரசு ஆஸ்பத்திரி முதல்வர் (பொறுப்பு) டாக்டர் குமரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்கின்றனர்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.